இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 11-03-2025

# இந்தியா முழுவதும் மொழிப்புரட்சி!

தமிழ்நாட்டில் எப்போதும் கனன்று கொண்டு இருக்கும் மொழிப்புரட்சியானது இப்போது இந்தியா முழுமைக்கும் தொடங்கிவிட்டது. இத்தகைய மொழிப் புரட்சிக்கும் தமிழ்நாடுதான் அடித்தளம் அமைத்து இருக்கிறது.

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்துக்கான இரண்டாயிரம் கோடி நிதியைத் தர வேண்டுமானால், மும்மொழித் திட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான், அதர்மமான நிபந்தனையை வைத்தார். ‘**இந்தி மொழி ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டால் தமிழ்நாடு பல நூற்றாண்டுகள் பின் தங்கிப் போகும். பத்தாயிரம் கோடி கொடுத்தாலும் அதனை ஏற்க மாட்டோம்**’ என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முழங்கினார்கள். இது இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் எதிரொலித்தது.

சி.பி.எஸ்.சி., ஐ.சி.எஸ்.இ., ஐ.பி. பள்ளிகளில் தெலுங்கு மொழி கட்டாயம் என தெலங்கானா மாநில அரசு அறிவித்தது. இவை அனைத்தும் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள கல்வி நிறுவனங்கள் ஆகும். ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை தெலுங்கு கட்டாயமாக கற்பிக்கப்பட வேண்டும் என்றும் அம்மாநில அரசு அறிவித்தது.

பஞ்சாபில் உள்ள சி.பி.எஸ்.சி. உள்ளிட்ட அனைத்துப் பள்ளிகளிலும் பஞ்சாபி மொழி கட்டாயம் என்று அம்மாநிலத்தை ஆளும் ஆம் ஆத்மி கட்சி அறிவித்தது.

இப்படி ஒவ்வொரு மாநிலமாக அறிவித்த நிலையில், ‘இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்’ என்ற தலைப்பில் தொடர் கடிதம் எழுதத் தொடங்கினார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அதில் மிக முக்கியமான ஒரு செய்தியைக் குறிப்பிட்டு இருந்தார் முதலமைச்சர் அவர்கள்.

‘**இந்தி மொழியை ஏற்றுக்கொண்ட பீகார் மாநில மக்களின் சொந்த மொழியான மைத்திலி, அந்த மாநிலத்தின் அடுத்தடுத்த தலைமுறையினர் அறிய முடியாதபடி வழக்கொழிந்த**து’ என்றும், ‘**இந்தியாவின் பெரிய மாநிலம் உத்தரபிரதேசம். இந்திதான் அந்த மாநிலத்தின் தாய்மொழி எனப் பலரும் நினைப்போம். உண்மை அதுவல்ல. பல்வேறு தாய்மொழிகளை, மண்ணின் மைந்தர்களுடைய மொழிகள் அனைத்தையும் இந்தி என்கிற ஆதிக்க மொழியின் படையெடுப்பு சிதைத்துவிட்டது**’ என்றும், ‘**உத்தரபிரதேசம், பீகார், மத்திய பிரதேசம், ஜார்கண்ட், சட்டீஸ்கர், ஹரியானா, ராஜஸ்தான் என இந்தியை ஆட்சிமொழியாகக் கொண்ட மாநிலங்களின் பூர்வீக மொழிகள் சிதைக்கப்பட்டு, அழிக்கப்பட்ட நிலையில், அந்த மொழி பேசும் மக்களின் பண்பாட்டு விழுமியங்களும், இலக்கியச் செழுமைகளும், மரபார்ந்த அறிவுத்திறனும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயிருக்கின்**றன’ என்றும், ‘**வடஇந்திய மாநிலங்களில் 25க்கும் மேற்பட்ட அந்தந்த மண்ணின் தாய்மொழிகளை கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் இந்தி சமஸ்கிருதம் எனும் ஆதிக்க மொழிகளின் படையெடுப்பு சிதைத்திருக்கி**றது’ என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கடிதங்களில் ஆதாரப்பூர்வமாக எழுதினார்கள். இந்த செய்திகள் சமூக ஊடகங்கள் மூலமாக வட மாநிலங்களில் பரவத் தொடங்கியதும், அங்குள்ள மக்கள் இதனை ஒப்புக் கொண்டு மறுமொழிகளை இட்டிருந்தார்கள்.

“**நான் மைத்திலி மொழியைச் சேர்ந்தவள். ஆனால் என் பிள்ளைகளுக்கு அதனை கற்பிக்க என்னால் முடியவில்லை**” என்று பீகாரைச் சேர்ந்த ஒரு பெண் பதிவு போட்டிருந்தார். ‘**என்னுடைய மொழி மகாதி. ஆனால் இன்று அம்மொழி வருங்காலத் தலைமுறையினருக்கு புரியாத மொழியாகியுள்ளது. அதற்குக் காரணம் இந்தி மொழித் திணிப்புதான். தமிழ்நாடு முதலமைச்சர் சொல்வதை நான் வழிமொழிகிறேன்**’ என்று அவின் என்ற இளைஞர் பதிவு செய்துள்ளார். தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆங்கிலத்தில் அளித்த பேட்டிக்கு பின்னூட்டம் இட்ட வடமாநிலத்தவர் பலரும் இதே போன்ற எதிர்வினையைச் செய்துள்ளார்கள்.

ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு அவர்கள் அளித்த பேட்டியில், “**உலகம் முழுக்க தமிழர்கள் நல்ல பதவிகளில் இருக்கிறார்கள். ஆங்கிலம் படித்ததால் தான் அவர்கள் உலகம் முழுக்க கோலோச்சுகிறார்கள். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பதவிகளில் நாடு முழுவதும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் இருக்கக் காரணம் அவர்களது ஆங்கில அறிவு தான். ஆங்கிலத்தை முறையாகக் கற்றதால் தான் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் உள்ள உயர் நிறுவனங்களில் தமிழர்கள் இருக்கிறார்கள். எந்த நாட்டுக்குச் சென்றாலும் அங்கு முக்கியப் பதவிகளில் தமிழர்களைப் பார்க்கலாம்**” என்று சொல்லி இருமொழிக் கொள்கையின் வெற்றியைச் சொல்லி இருந்தார்.

இருமொழி கொள்கைக்கு கன்னட வளர்ச்சி ஆணையம் ஆதரவு தெரிவித்துள்ளது. கர்நாடகாவில் இருமொழிக் கொள்கையை செயல்படுத்த வேண்டும் என அம்மாநில முதலமைச்சர் சித்தராமையாவுக்கு கன்னட வளர்ச்சி ஆணைய தலைவர் கடிதம் எழுதி உள்ளார். ‘கன்னட மொழியை பாதுகாக்க வேண்டுமானால் இருமொழி கொள்கையை பின்பற்ற வேண்டும்’ என்று கன்னட வளர்ச்சி ஆணையத் தலைவர் புருஷோத்தம் பிளிமலே தெரிவித்துள்ளார்.

இது ஏதோ எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலத்தில் மட்டுமல்ல, பா.ஜ.க. ஆளும் மகாராஷ்டிராவிலும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. ‘மகாராஷ்டிரா வருபவர்கள் மராத்தி கற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை’ என்று ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் மூத்த தலைவர் சுரேஷ் பையாஜி ஜோஷி சொன்னதும், அதனைக் கடுமையாக எதிர்த்தவர் அம்மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. முதலமைச்சர் பட்னாவிஸ். ‘**மும்பை மற்றும் மராட்டியத்தின் மொழி மராத்தி. அனைவரும் மராத்தி கற்க வேண்டும். மராத்தி மொழியைப் பேச வேண்டும்**’ என்று சொல்லி இருக்கிறார் பா.ஜ.க. முதலமைச்சர் பட்னாவிஸ்.

சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே சொல்லி இருக்கிறார்: “**ஆர்.எஸ்.எஸ். தலைவர் மீது தேசத் துரோக வழக்குப் பதிவு செய்ய வேண்டும். இவரது கருத்துகள் மும்பையைப் பிரிக்கும் ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.வின் திரைமறைவு காட்சிகளைப் பிரதிபலிக்கிறது. அவர் மகாராஷ்டிராவில் இப்படி பேசி இருக்கிறார். குஜராத், தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் இப்படிப் பேசிவிட்டு பாதுகாப்பாக அவரால் திரும்பி வர முடியுமா?**” என்று கேட்டிருக்கிறார்.

ஆம்! உண்மைதான்! பா.ஜ.க. செய்யும் மொழித் திணிப்பு என்பது இந்தியாவின் பன்முகத் தன்மையைச் சிதைக்கும் பிளவுவாத அரசியல்தான். அதனை இப்போது இந்தியாவே உணர்ந்து கொண்டு விட்டதன் அடையாளம்தான் பல்வேறு மாநிலங்களில் எதிரொலிக்கும் மொழி ஆதரவு மொழிகள்.

● ●



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நகரம் ஜின்னா பாலம் அருகே கல்லாறு மற்றும் சின்ன பாம்பாட்டினை புனரமைத்தல் பணியினை நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆகியோர் துவக்கி வைத்தனர். உடன் மாவட்டக் கழக செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், மாவட்ட ஊராட்சி குழுதலைவர் என்.கே.ஆர். சூரியகுமார், நகராட்சி தலைவர் உமா பாய் சிவாஜி கணேசன், நகர செயலாளர் வி.எஸ். சாரதி குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் 72-வது பிறந்தநாளை முன்னிட்டு, முதல்வரின் கலைக்களம் என்ற தலைப்பில், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி பெரம்பூர் டான் போஸ்கோ பள்ளி மைதானத்தில் மூன்றாவது நாளாக தொடர்ந்து நடைபெற்றுவரும் நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகள் மற்றும் உணவுத்திரு விழாவை கழக துணைப்பொதுச்செயலாளரும், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் பார்வையிட்டார். உடன்அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, பி.கே.சேகர்பாபு மற்றும் தருமபுரம் ஆதீனம் மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கலாநிதி வீராசாமி எம்.பி., மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.






### கல்லும் முள்ளுமான கடினமான பயணத்தில் தன் உழைப்பினாலும் திறமையினாலும் தானும் உயர்ந்து

# தமிழகத்தை உயர்த்தி வருகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## சென்னை கிழக்கு மாவட்டத்தில் நடைபெற்ற – முதல்வர் பிறந்த நாள் விழாவில் – கலைஞானி கமலஹாசன் புகழாரம்!

**சென்னை, மார்ச் 11 –**

**கல்லும் முள்ளுமான கடினமான பயணத்தில் தன் உழைப்பினாலும் திறமையினாலும் தானும் உயர்ந்து தமிழகத்தை உயர்த்தி வருகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்று சென்னை கிழக்கு மாவட்டத்தில் நடைபெற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் மக்கள் நீதிமய்ய நிறுவனத் தலைவர் கலைஞானி கமலஹாசன் புகழாரம் சூட்டினார்.**

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி சார்பில் மக்கள் முதல்வரின் மனித நேய விழாவை முன்னிட்டு மனிதநேயம் 15, முதல்வரின் கலைக்களம் எனும் தலைப்பில் நமது பண்பாட்டு கலைகளை கொண்டாடும் கலை விழாவை தொடங்கி வைத்து மக்கள் நீதி நிறுவனத் தலைவர் கலைஞானி கமலஹாசன் அவர்கள் கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு:–

உயிரே, உறவே, தமிழே வணக்கம்!

தமிழ்நாடு முதல்வர் என் அருமை நண்பர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாளை அவரது சொந்தத் தொகுதியான கொளத்தூரில் ‘முதல்வரின் கலைக்களம்’ என்னும் பெயரில் மனதிற்கு மகிழ்வூட்டும் கலைத் திருவிழா வாகவும் நாவிற்கும் மகிழ்வூட்டும் உணவுத் திருவிழா வாகவும் ஏற்பாடு செய்திருப்பது பாராட்டுக் குரியது.



### அமைச்சர் பி.கே.சேகர்பாபு பாராட்டு!

இந்த மூன்று நாட்களுக்கான திருவிழாவை தொடங்கி வைப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். சிறப்பான முறையில் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ள மாண்புமிகு இந்து அறநிலையத் துறை அமைச்சர் திரு சேகர் பாபு அவர்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகிகள், நண்பர்கள் அனைவருக்கும் என் பாராட்டுக்களை வணக்கங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

முதல்வர் ஸ்டாலின் அவர்கள் எழுதிய சுய சரிதையான ‘உங்களில் ஒருவன்’ வாசித்துவிட்டு நான் ஏற்கனவே சொன்னக் கருத்தை மீண்டும் இங்கே சொல்லாம் என்று நினைக்கிறேன்.

### மிசா கைதியாக சிறையில் அடைக்கப்பட்டார்!

திருமணமான ஐந்தே மாதங்களில் மிசா கைதியாக சிறையில் அடைக்கப்பட்டார். அவர் அங்கே பட்ட இன்னல்களை சிட்டிபாபு அவர்களின் ‘சிறை டைரி’ ‘தோழர் தியாகுவின்’ சுவருக்குள் சித்திரம் ஆகிய நூல்களை வாசித்து என் கண்களை நனைத்திருக்கிறேன். அன்று தொடங்கி இன்று வரை நீளும் கல்லும், முள்ளுமான கடினமான பயணத்தில் தன் உழைப்பினாலும், திறமையினாலும் தானும் உயர்ந்து தமிழகத்தையும் உயர்த்துகிறார் ஸ்டாலின் அவர்கள்.

### இந்தியாவிற்கே முன்னுதாரணம்!

தமிழ்நாடு இன்று ஒட்டுமொத்தமான இந்தியாவிற்கும் ஒரு முன்னுதாரணம் என்று சொல்வதை விட அனைவருக்கும் புரியும்படி சொல்ல வேண்டும் என்றால் ஒரு ‘மாடலான’ இருக்கிறது. அது என்ன ‘மாடல்’ என்று கேட்டால் டெல்லியில் சொல்வார்கள். நமக்குத் தெரியும். அவர்களுக்கு புரிய வேண்டும்.

கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பு, தொழில் வளர்ச்சி, தனிநபர் வருமானம் உள்ளிட்ட அத்தனை தரப்பட்டியலிலும் தமிழ்நாடு முதலில் வகிக்கிறது. இது இந்தியாவிலிருந்து வெளிநாட்டில் இருந்து பார்ப்பவர்களுக்கும் தெரியும் உண்மை. துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்புகளால் தமிழ்நாட்டு இளைஞர்கள் விளையாட்டுத் துறையிலும் பதக்கங்களை குவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டிற்கு மட்டும் நல்லது செய்கிறாரா என்றால் அதனையும் தாண்டி புனிதமானது அவருடைய பயணம். ஒன்றிய அரசு மாநிலங்களின் உரிமைகளை பறிக்க முயலும் போது, இந்துத்துவ கொள்கைகளையும் இந்தியையும் தேசமெங்கும் திணிக்க முற்படும் போது, ஜனநாயகத்தையும் கூட்டாட்சித் தத்துவத்தையும் கேள்விக்குள்ளாக்கும் போது தெற்கிலிருந்து ஓங்கி ஒலிக்கும் உரிமையான குரலாக சிறப்பான குரலாக ஸ்டாலின் அவர்களின் குரல் ஒலிக்கிறது.

தமிழ் மொழியையும் பண்பாட்டையும் போற்றிப் பாதுகாக்கும் அரும் பணியையும் தன்னை தளராது ஈடுபடுத்திக் கொண்டு இருக்கும் நண்பர் ஸ்டாலின் அவர்கள் நீடூழி வாழ வேண்டும்! என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

### கோவில்களில் விழாக்களை நடத்தி வருகிறார் அமைச்சர் சேகர்பாபு!

இந்த கொளத்தூர் தொகுதி முதல்வரின் மனதிற்கு நெருக்கமானத் தொகுதி என்பதற்கு பல உதாரணங்களை சொல்லலாம். அவர் தான் கொளத்தூரை தனித் தாலுக்காவாக மாற்றினார். முதல்வர் படைப்பகம், பெரியார் மருத்துவமனை என அவர் கொளத்தூர் மக்களுக்குச் செய்தது ஏராளம். தங்களது கலைத் திறமையால் மக்களை மகிழ்விக்க வந்திருக்கும் நாட்டுப்புற கலைஞர்களுக்கு வணக்கம் வாழ்த்துகள்.

மகளிர் சுய உதவிக்குழுவினர் இங்கே ஸ்டால்களை அமைத்து சுவையான உணவு பறிமாறுகிறார்கள். தமிழ்நாட்டின் சுய உதவிக்குழுக்கள் மிகச் சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த நிகழ்வை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கும் அமைச்சர் சேகர் பாபு, இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது மட்டுமல்ல, பலக் கோவில்களில் பல விழாக்கள் நடப்பதற்கு அவர் காரணமாக இருக்கிறார். இவருக்கு என் மேல் தனி பரிவும் பாசமும் உண்டு என்பதை நான் அறிவேன். அதற்கு நன்றி என்று சொன்னால் அது போதாது; அவர் கொடுத்த அதே பரிவும் பாசமும் என்னிடமிருந்து அவருக்கும் உண்டு என்பதை அவருக்கு தெரியப்படுத்திக் கொள்வதுதான் அவருக்கு புரியும் பாஷையில் நான் சொல்லும் நன்றி .

### மகளிர் தின வாழ்த்துக்கள்!

மாநிலங்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து நாடாளுமன்றத்தில் குரல்கொடுத்து வரும் சகோதரி கனிமொழி அவர்கள் நேற்று இராத்திரி 11.30 மணி வரை இங்கே உட்கார்ந்து ஏற்பாடு செய்துவிட்டு இன்றைக்கு மேடையில் இல்லாமல் அங்கே உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள் அது தான் தலைமைக்கு அழகு. இந்தப் பண்பை நமது தொண்டர்கள் பார்த்து புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்துள்ள சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், சென்னை மேயர் திருமதி பிரியா ராஜன் அவர்கள், சென்னை மாநகராட்சி கவுன்சிலர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகிகள், தொண்டர்கள், என் உயிரும் உணர்வுமாக மக்கள் நீதி மையத்தின் உறவுகள் அனைவருக்கும் என் வணக்கமும் வாழ்த்தும்.

அய்யா அன்பழகன் அவர்கள் வீட்டில் எனக்கு ஒரு தனி பாராட்டுச் சொல்லும் கூட்டம் இருக்கிறது. ஏன் என்றால் அவர்கள் நாயகனில் என்னை பார்க்கவில்லை, அந்த வேலு நாயக்கரைப் பார்க்கவில்லை. அவர்கள் அவர்களுடைய தாத்தாவைத்தான் பார்த்தார்கள். ஏன் என்றால் நான் கண்ணாடி போடும் போதே அவரை நினைத்துக் கொண்டு தான் அந்தக் கண்ணாடியை போட்டேன். ஏன் என்றால் சின்ன வயதில் நான் பார்த்த பெரும் தலைவர்கள் இவர்கள் எல்லோரும்.

மகளிர் தின வாழ்த்துக்கள் சொல்லி,

பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும்

பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்,

எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்

இளைப்பில்லை காண் என்று கும்மியடி!

– என்கிற பாரதியின் வரியை நிதர்சனமாக்கிக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டுப் பெண்களுக்கும் என்னுடைய மகளிர் தின வாழ்த்துகள். என்னை அன்புடன் இங்கே அழைத்தஅனைவருக்கும் என் வணக்கங்கள்! நன்றி!!

இவ்வாறு கலைஞானி கமலஹாசன் அவர்கள் வாழ்த்தி உரையாற்றினார்.